# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2387/37 - 2024 ජුනි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.06

*2387/37 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம்***
**தேசிய லொத்தர் சபை விதிகள்**

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 16 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தேசிய லொத்தர் சபையினால் ஆக்கப்பட்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

**சமீர சந்திராபய யாபா அபேவர்தன,**
தவிசாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்,
தேசிய லொத்தர் சபை.

கொழும்பு,
*2024,* மே *21.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய லொத்தர் சபை விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. (இதனகத்துப் பின்னர் "தேசிய லொத்தர் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய லொத்தர் சபையினால் நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தேசிய லொத்தர்களை நடாத்துதல் வேண்டும்:-

(அ) மஹஜன சம்பத;
(ஆ) கொவிசெத;
(இ) மெகா பவர்;
(ஈ) லக்கி 7 VIP;
(உ) NLB ஹந்தஹன;
(ஊ) தன நிதானய;
(எ) NLB மெகா மில்லியன்ஸ்;
(ஏ) செவன சுரண்டல் லொத்தர் அத்துடன்;
(ஒ) சமுர்த்தி சுரண்டல் லொத்தர்;


1A - G 42031 — 05 (2024/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. தேசிய லொத்தர் சபை, மேற்சொல்லப்பட்ட 2 (அ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **மஹஜன சம்பத** தேசிய லொத்தரை, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்திற்கு ஏழு சீட்டிழுப்புக்கள் வாரத்தின் ஏழு நாட்களிலும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் நாற்பது ரூபா (ரூ.40/-) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மட்டுமே வெல்வதற்கு தகுதியுடையதாயிருத்தல் வேண்டும்.

(4) சீட்டுக்களை இலக்கமிடுதல் 000000 இலக்கம் தொடக்கம் 999999 என்ற இலக்கம் வரை இருத்தல் வேண்டும். ஒவ்வொரு சீட்டிலும் பூச்சியம் தொடக்கம் ஒன்பது (0-9) வரையிலான 6 இலக்கங்களுடன் ஆங்கில அரிச்சுவடியிலுள்ள "ஐ" என்ற எழுத்தைத்தவிர்த்து, "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில எழுத்துகள் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும், மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக் குறிமுறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டு வடிவம் ஆகியவற்றில் தொடரிலக்க மொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஆங்கில அரிச்சுவடியிலுள்ள "ஐ " என்ற எழுத்தைத் தவிர்த்து, "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஒரு ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, பூச்சியம் தொடக்கம் ஒன்பது (0-9) வரையிலான இலக்கங்களைக் கொண்ட ஆறு பீப்பாய்களிலிருந்து, ஒரு பீப்பாயிலிருந்து ஒரு இலக்கம் வீதம் ஆறு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) சீட்டுக்களின் விற்பனையிலிகுத்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு ஐம்பது (50%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவருக்கான தரகுப்பணத்துக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும். (சீட்டுகளை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப்பனமும்)

(இ) லொத்தர் சீட்டுக்களின் வரும்படியிலிருந்து கிடைக்கும் பணத்தில் நூற்றுக்கு பதினாறு தசம் ஐந்து சதவீதம் (16.5%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஈ) சீட்டுக்களின் வரும்படியிலிருந்து கிடைக்கும் பணத்திலிருந்து பதின்மூன்று தசம் ஐந்து சதவீதம் (13.5%) தேசிய லொத்தர் சபையின் "சபை நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) ஒரு சீட்டிலுள்ள ஆங்கில எழுத்து மற்றும் ஆறு இலக்கங்களும் முறையே இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற , சீட்டிலுக்கப்பட்ட ஆங்கில எழுத்து மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு இருபது மில்லியன் ரூபாவுக்கு (ரூ.20,000,000/-) குறையாத சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) ஒரு சீட்டிலுள்ள ஆறு இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவுசெய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு இரண்டு தசம் ஐந்து மில்லியன் ரூபா (ரூ.2,500,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள கடைசி ஐந்து இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபா (ரூ.100,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள கடைசி நான்கு இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் பதினைந்தாயிரம் ரூபா (ரூ.15,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள கடைசி மூன்று இலக்கங்கள் முறையே இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள கடைசி இரண்டு இலக்கங்கள் முறையே இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஓ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டுகளிலுள்ள கடைசி இலக்கம் தொடர்ச்சியாக வருகின்ற தெரிவுசெய்யப்பட்ட கடைசி இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுகளிலுள்ள முதல் ஐந்து இலக்கங்களும் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின் தெரிவு செய்யப்பட்ட முதல் ஐந்து இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்ச ரூபா (ரூ.100,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுகளிலுள்ள முதல் நான்கு இலக்கங்களும் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியா வருகின்ற தெரிவுசெய்யப்பட்ட முதல் நான்கு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகையசீட்டு ஒவ்வொன்றுக்கு இரண்டாயிரம் ரூபா (ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ங) ஒன்று அல்லது அதற்கு சீட்டுகளிலுள்ள முதல் மூன்று இலக்கங்களும் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரி செய்யப்பட்ட முதல் மூன்று இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரு று ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ச) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுகளிலுள்ள முதல் இரண்டு இலக்கங்களும் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியா வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கு எண்பது ரூபா (ரூ.80/-) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும்

(ஞ) ஒன்று அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டுகளிலுள்ள ஆரம்ப இலக்கம் தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட் ஆரம்ப இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீத வழங்கப்படுதல் வேண்டும்

(ட) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துட ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ண) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

**பரிசுக் கட்டமைப்பு**

| பரிசு | ஆங்கில எழுத்து | தெரிவு செய்யப்பட்ட வெற்றி இலக்கங்கள் | | | | | | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X ○ | X | X | X | X | X | X | ரூ.20,000,000/- |
| 1 பரிசு | ○ | X | X | X | X | X | X | ரூ.2,500,000/- வீதம் |
| 2 பரிசு | ○ | | X | X | X | X | X | ரூ. 100,000/- வீதம் |
| 3 பரிசு | ○ | | | X | X | X | X | ரூ. 15,000/- வீதம் |
| 4 பரிசு | ○ | | | | X | X | X | ரூ. 2,000/- வீதம் |
| 5 பரிசு | ○ | | | | | X | X | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | ○ | | | | | | X | ரூ. 40/- வீதம் |
| | | | | | | | | |
| 7 பரிசு | ○ | X | X | X | X | X | | ரூ. 100,000/- வீதம் |
| 8 பரிசு | ○ | X | X | X | X | | | ரூ. 2,000/- வீதம் |
| 9 பரிசு | ○ | X | X | X | | | | ரூ. 200/- வீதம் |
| 10 பரிசு | ○ | X | X | | | | | ரூ. 80/- வீதம் |
| 11 பரிசு | ○ | X | | | | | | ரூ. 40/- வீதம் |
| 12 பரிசு | X | | | | | | | ரூ. 40/- வீதம் |

(த) மஹஜன சம்பத லொத்தரின் சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி இருபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.20,000,000/-) ஆரம்பமாகும்

(ந) தற்போதுள்ள சுப்பர் பரிசை வென்றால், மஹஜன சம்பத பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி இருபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.20,000,000 /-) புதிய சுப்பர் பரிசு ஆரம்பமாகும்

(ப) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட சீட்டுக்கள் விற்பனையினால் கிடைத்த நூற்றுக்கு ஐம்பது சதவீதமான (50%) யாதாயினும் பணத்தொகை எஞ்சியிருக்கும் பட்சத்தில், அந்த மீதியாகவுள்ள பணத்தில் (மேலதிகம்/மீதி) நூற்றுக்கு இருபது (20%) சதவீதம் முன்கொண்டு செல்லும் சுப்பர் பரிசின் பெறுமதியுடன் கூட்டப்பட வேண்டும் என்பதுடன், எஞ்சிய நூற்றுக்கு எண்பது சதவீதம் (80%) நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மஹஜன சம்பத பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்

(ம) ஏதேனும் மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பில் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து மஹஜன சம்பத பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள அல்லது பிற வேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது நிலுவைகளை செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(ய) தேசிய லொத்தர் சபைக்கு அவசியமெனக் கருதப்படுமிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தருக்காக பரிசுகளை வழங்குவதற்கு மஹஜன சம்பத பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டும் மற்றும்

(ர) சீட்டிழுப்பு இலக்கம் 5182 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக்கட்டமைப்பு 2023, யூலை மாதம் 21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

4. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (ஆ) என்னும் விதியில் குறிப்பிடப்பட்ட **கொவிசெத** தேசிய லொத்தரை, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வாரத்தின் ஏழு நாட்களும் வாரத்திற்கு ஏழு சீட்டிழுப்பு நடாத்தப்படுதல் வேண்டும்.
(2) ஒவ்வொரு சீட்டும் நாற்பது ரூபா (ரூ.40/-) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.
(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மட்டுமே உடையதாயிருத்தல் வேண்டும்.
(4) ஒவ்வொரு சீட்டிலும் ஒன்று தொடக்கம் எண்பது (1-80) வரையிலான இலக்கங்களில் நான்கு இலக்கங்கள் ஆங்கில அரிச்சுவடியிலுள்ள ''ஏ'' தொடக்கம் ''இசெட்''வரையிலான ஆங்கில எழுத்துக்களில் ஒரு ஆங்கில எழுத்துடன் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும், மூன்றுவடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறி முறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற் செயற்பாட்டு குறியீட்டு வடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெற்றி பெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஒன்று தொடக்கம் எண்பது (1-80) வரையிலான இலக்கங்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, ஆங்கில அரிச்சுவடியிலுள்ள "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஒரு ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறையினையும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(5) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்:-

அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நூற்றுக்கு நாற்பத்தியொன்பது (49%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஆ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப் பணத்துக்கு (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

இ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஈ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபத்தியொரு சதவீதம் (21%) தேசிய லொத்தர் சபையின் "சபையின் நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

உ) ஒரு லொத்தர் சீட்டில் நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடனும் மற்றும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டிற்கு அறுபது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத (ரூ.60,000,000) சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

ஊ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டிற்கு இரண்டு மில்லியன் ரூபா (ரூ.2,000,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள மூன்று இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் தெரிவுசெய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ.250,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் மூன்று இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா (ரூ.5,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ஐ) ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இரண்டு இலக்கங்களுடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுகளிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்ட இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ஓ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுகளிலுள்ள ஏதேனும் ஒரு இலக்கமும், ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு இலக்கத்துடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும்

ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுகளிலுள்ள ஒரு இலக்கம், தெரிவு செய்யப்பட்ட ஒரு இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டு அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ங) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும், 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ.60,000,000/- |
| 1 பரிசு | 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 2,000,000/- வீதம் |
| 2 பரிசு | ஆங்கில எழுத்தும், 3 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 250,000/- வீதம் |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 5,000/- வீதம் |
| 4 பரிசு | ஆங்கில எழுத்தும், 2 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 2,000/- வீதம் |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | ஆங்கில எழுத்தும், 1 இலக்கமும் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து சரியாயின் | ரூ. 40/- வீதம் |

(ச) கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி அறுபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.60,000,000/-) ஆரம்பமாகும்

(ஞ) தற்போதுள்ள சுப்பர் பரிசை வென்றால், கொவிசெத பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி அறுபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.60,000,000/) புதிய சுப்பர் பரிசு ஆரம்பமாகும்

(ட) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட லொத்தர் சீட்டு விற்பனையில் கிடைத்த நூற்றுக்கு நாற்பத்தியொன்பது (49%) சதவீதத்தில் ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும் பட்சத்தில், சொல்லப்பட்ட மீதியாகவுள்ள பணத்தில் (மிகை / மீதி) நூற்றுக்கு பத்து (10%) சதவீதம் முன்கொண்டு செல்லப்படும் சுப்பர் பரிசுப் பெறுமதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மிகுதி நூற்றுக்கு தொண்ணூறு (90%) சதவீதமான தொகை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, கொவிசெத பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்

ண) ஏதேனும் கொவிசெத லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து கொவிசெத பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள அல்லது பிறவேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது நிலுவைப் பணத்தைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்

த) அவசியமாகக் கருதப்படுமிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பிலான பரிசுகள் கொடுப்பனவுக்காக கொவிசெத பரிசு ஒதுக்கக்கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும் அத்துடன்

ந) சீட்டிழுப்பு இலக்கம் 3409 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக்கட்டமைப்பு 2023, யூலை மாதம் 6 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

5. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (இ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **மெகா பவர்** தேசிய லொத்தரை (இதற்கு முன்னர் "பவர் லொடோ" எனும் பெயரில் நடாத்தப்பட்டுள்ளது) இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வாரத்தில் ஏழு சீட்டிழுப்புக்கள் வாரத்தில் ஏழு நாட்களும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு லொத்தர் சீட்டும் நாற்பது ரூபா (ரூ.40/-) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மாத்திரம் வெற்றிபெறச்செய்வதற்கு தகுதியுடையதாயிருத்தல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், ஏதேனும் வெற்றிபெற்ற லொத்தர் சீட்டிலுள்ள சுப்பர் இலக்கம் தெரிவுசெய்யப்பட்ட சுப்பர் இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய வெற்றிபெற்ற லொத்தர் சீட்டுக்கு மேலதிகமாக நாற்பது ரூபா (ரூ.40/-) தொகை வழங்கப்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு சீட்டிலும் ஒன்று தொடக்கம் இருபத்தியாறு (1-26) வரையான இலக்கங்களுக்குள் சுப்பர் இலக்கம் ஒன்று மற்றும் ஆங்கில அரிச்சுவடியிலுள்ள "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில எழுத்துக்களில் ஒரு ஆங்கில எழுத்து மற்றும் ஒன்று தொடக்கம் எண்பது (1-80) வரையிலான இலக்க எல்லைக்குள் நான்கு இலங்கங்கள் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு லொத்தர் சீட்டும், மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறிமுறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற் செயற்பாட்டு குறியீட்டு வடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல்வேண்டும்.

(5) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, உரிய இலக்க எல்லையிலுள்ள இலக்கங்களைக் குறிப்பிட்டு பிரிக்கப்பட்ட பந்து தொகுதிகள் இரண்டினை உள்ளடக்கி வெவ்வேறாக உருவாக்கப்பட்ட இரண்டு பீப்பாய்களிலிருந்து, ஒன்று தொடக்கம் எண்பது (1-80) வரையிலான இலக்கங்களைக் கொண்ட பந்துகளடங்கிய ஒரு பீப்பாயிலிருந்து நான்கு இலக்கங்கள் மற்றும் ஒன்று தொடக்கம் இருபத்தியாறு (1-26) வரையிலான இலக்கங்களைக் கொண்ட பீப்பாயிலிருந்து சுப்பர் இலக்கமும் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, ஆங்கில அரிச்சுவடியில் "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஒரு ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நூற்றுக்கு ஐம்பது (50%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப்பணத்துக்கு (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

(இ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஈ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) தேசிய லொத்தர் சபையின் "சபை நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள நான்கு இலக்கங்கள், சுப்பர் இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்து, தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடனும், சுப்பர் இலக்கத்துடனும் மற்றும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு நூற்றியம்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூ.150,000,000/-) குறையாத மெகா சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு பத்து மில்லியன் ரூபா (ரூ.10,000,000/-) பவர் சுப்பர் பரிசாக வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள நான்கு இலக்கங்கள் மற்றும் சுப்பர் இலக்கம் தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடனும், மற்றும் சுப்பர் இலக்கத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு பத்து மில்லியன் ரூபா (ரூ.10,000,000/-) கிராண்ட் சுப்பர் பரிசாக வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு இரண்டு மில்லியன் ரூபா (ரூ.2,000,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஏதேனும் மூன்று இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் தெரிவுசெய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடனும்,ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இலட்சம் ரூபா (ரூ.200,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் மூன்று இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐயாயிரம் ரூபா (ரூ.5,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஓ) ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு இலக்கங்களுடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா(ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா(ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(க) ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஏதேனும் ஒரு இலக்கமும், ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு இலக்கத்துடனும், ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ங) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஒரு இலக்கம், தெரிவு செய்யப்பட்ட ஒரு இலக்கத்துடன் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ச) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஞ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள சுப்பர் இலக்கம் தெரிவுசெய்யப்பட்ட சுப்பர் இலக்கத்துடன் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ட) அதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| மெகா சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும், சுப்பர் இலக்கமும், 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ.150,000,000/- |
| பவர் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ.10,000,000/- |
| கிராண்ட் சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கமும், 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 10,000,000/- |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/-வீதம் |
| 2 பரிசு | 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் சரியாயின் | ரூ. 200,000/- வீதம் |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 5,000/- வீதம் |
| 4 பரிசு | 2 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் சரியாயின் | ரூ. 2,000/- வீதம் |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | 1 இலக்கமும் ஆங்கில எழுத்தும் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 8 பரிசு | ஆங்கில எழுத்துக்கள் சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 9 பரிசு | சுப்பர் இலக்கம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |

(ண) மெகா பவர் லொத்தரின் மெகா சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி நூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.150,000,000) ஆரம்பமாகும்

(த) தற்போதுள்ள மெகா சுப்பர் பரிசை வென்றால், மெகா பவர் பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி நூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.150,000,000/-) புதிய மெகா பரிசு ஆரம்பமாகும்

(ந) தற்போதுள்ள மெகா பவர் லொத்தரின் பவர் சுப்பர் பரிசை வென்றால், பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி பத்து மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.10,000,000/-) புதிய நிலையான பவர் சுப்பர் பரிசு ஆரம்பிக்கும்

(ப) தற்போதுள்ள மெகா பவர் லொத்தரின் கிராண்ட் சுப்பர் பரிசை வென்றால், பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி பத்து மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.10,000,000/-) புதிய நிலையான கிராண்ட் சுப்பர் பரிசு ஆரம்பிக்கும்

(ம) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள சீட்டுக்களின் விற்பனையில் கிடைக்கும் நூற்றுக்கு ஐம்பது (50%) சதவீதத்திலிருந்து ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும் பட்சத்தில், குறித்த எஞ்சியுள்ள பணத்திலிருந்து (மிகை/மீதி) நூற்றுக்கு தொந்நூறு (90%) சதவீதமானவை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மெகா சுப்பர் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய நூற்றுக்கு பத்து (10%) சதவீதமானவை (மிகை/மீதி) முன்கொண்டு செல்லப்படும் மெகா சுப்பர் பரிசுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்

(ய) ஏதேனும் மெகா பவர் லொத்தர் சீட்டிழுப்பில் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையானது வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து, மெகா பவர் பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள அல்லது பிறவேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது நிலுவைகளை செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(ர) தேசிய லொத்தர் சபை அவசியமெனக் கருதுகின்றவிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகளை வழங்குவதற்காக மெகா பவர் பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும் அத்துடன்

(ல) சீட்டிழுப்பு இலக்கம் 1533 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக்கட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

6. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (ஈ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **லக்கி 7 - VIP** தேசிய லொத்தரை (இதற்கு முன்னர் "ஜாதிக சம்பத" எனும் பெயரில் நடாத்தப்பட்டது) இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வாரத்தில் ஏழு நாட்களும் வாரத்திற்கு ஏழு சீட்டிழுப்புகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு லொத்தர் சீட்டும் நாற்பது ரூபா (ரூ.40/-)என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மாத்திரம் வெல்வதற்கு தகைமை உடையதாயிருத்தல் வேண்டும்.

(4) லொத்தர் சீட்டுக்களை இலக்கமிடுதல் 000000 இலக்கம் தொடக்கம் 999999 இலக்கம் வரை இருத்தல் வேண்டும். ஒவ்வொரு லொத்தர் சீட்டிலும் பூச்சியம் தொடக்கம் ஒன்பது (0-9) வரையிலான ஆறு இலக்கங்கள் ஆங்கில அரிச்சுவடியிலுள்ள "ஐ" என்ற எழுத்தைத் தவிர்த்து, "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில எழுத்தொன்றுடன் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு லொத்தர் சீட்டும் மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறி முறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டு வடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வெற்றிபெறும் லொத்தர் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, "ஐ" என்ற எழுத்தைத் தவிர்த்து, "ஏ" தொடக்கம் "இசெட்" வரையிலான ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஒரு ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, பூச்சியம் தொடக்கம் ஒன்பது (0-9) வரையிலான இலக்கங்களைக் கொண்ட ஆறு பீப்பாய்களிலிருந்து, ஒரு பீப்பாயிலிருந்து ஒரு இலக்கம் வீதம் ஆறு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நூற்றுக்கு ஐம்பத்தேழு (57%) சதவீதம் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப் பணத்துக்காக (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

இ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு மற்றும் ஏனைய நிதியங்களுக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஈ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பதின்மூன்று சதவீதம் (13%) தேசிய லொத்தர் சபையின் "சபை நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள ஆங்கில எழுத்தும், ஆறு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடனும், ஆறு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்த சீட்டுக்கு இருபது மில்லியன் ரூபாவுக்கு (ரூ.20,000,000/-) குறையாத சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) ஒரு லொத்தர் சீட்டிலுள்ள ஆறு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடன் இடமிருந்து வலமாக ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு இரண்டு தசம் ஐந்து மில்லியன் ரூபா (ரூ.2,500,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள கடைசி ஐந்து இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற, தெரிவு செய்யப்பட்ட கடைசி ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூ.250,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள கடைசி நான்கு இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற, தெரிவு செய்யப்பட்ட கடைசி நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருபதினாயிரம் ரூபா (ரூ.20,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள கடைசி மூன்று இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள கடைசி இரண்டு இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற, தெரிவு செய்யப்பட்ட கடைசி இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய லொத்தர் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஓ) ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள கடைசி இலக்கம், தெரிவு செய்யப்பட்ட கடைசி இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள முதல் ஐந்து இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபா (ரூ.100,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள முதல் நான்கு இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நான்காயிரம் ரூபா (ரூ.4,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ங) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள முதல் மூன்று இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபா (ரூ.500/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ச) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள முதல் இரண்டு இலக்கங்கள் இடமிருந்து வலமாக, தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூற்றியிருபது ரூபா (ரூ.120/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஞ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள முதல் இலக்கம், தெரிவு செய்யப்பட்ட முதல் இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ட) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து, தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ண) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஆறு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடன் (எந்தவொரு ஒழுங்கிலும்) ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு ஐந்நூறு ரூபா (ரூ.500/-) வழங்கப்படுதல் வேண்டும்

(த) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | | பெறுமதி |
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | X | X | X | X | X | X | ரூ.20,000,000/-ரூபா |
| 1 பரிசு | | X | X | X | X | X | X | ரூ.2,500,000/-வீதம் |
| 2 பரிசு | | | X | X | X | X | X | ரூ. 250,000/- வீதம் |
| 3 பரிசு | | | | X | X | X | X | ரூ. 20,000/- வீதம் |
| 4 பரிசு | | | | | X | X | X | ரூ. 2,000/- வீதம் |
| 5 பரிசு | | | | | | X | X | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | | | | | | | X | ரூ. 40/- வீதம் |
| | | | | | | | | |
| 7 பரிசு | | X | X | X | X | X | | ரூ. 100,000/- வீதம் |
| 8 பரிசு | | X | X | X | X | | | ரூ. 4,000/- வீதம் |
| 9 பரிசு | | X | X | X | | | | ரூ. 500/- வீதம் |
| 10 பரிசு | | X | X | | | | | ரூ. 120/- வீதம் |
| 11 பரிசு | | X | | | | | | ரூ. 40/- வீதம் |
| 12 பரிசு | ஆங்கில எழுத்து | | | | | | | ரூ. 40/- வீதம் |
| 13 பரிசு | ஏதேனும் ஒரு ஒழுங்கில் 6 வெற்றி இலக்கங்கள் பொருந்துதல் | | | | | | | ரூ. 500/- வீதம் |

(ந) லக்கி 7 VIP லொத்தரின் சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி இருபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.20,000,000/-) ஆரம்பமாகும்

(ப) தற்போதுள்ள சுப்பர் பரிசை வென்றால், லக்கி 7 VIP பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி இருபது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.20,000,000/-) புதிய சுப்பர் பரிசு ஆரம்பமாகும்

(ம) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட சீட்டுக்களின் விற்பனையினால் கிடைத்த பணத்தொகையின் நூற்றுக்கு ஐம்பத்தேழு (57%) சதவீதத்தில் ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும்பட்சத்தில், குறித்த எஞ்சியுள்ள தொகையில் (மிகை/மீதி) நூற்றுக்கு பத்து (10%) சதவீதம் முன்கொண்டு செல்லும் சுப்பர் பரிசு பெறுமதியுடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதுடன், எஞ்சிய தொண்ணூறு (90%) சதவீதமானவை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க லக்கி 7 VIP பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்

(ய) ஏதேனும் லக்கி 7 VIP லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து, லக்கி 7 VIP பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணம் அல்லது பிறவேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது செலுத்தப்படவேண்டிய நிலுவைப் பணத்தைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(ர) அவசியமாகக் கருதப்படுமிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகளை வழங்குவதற்காக லக்கி 7 VIP பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும் அத்துடன்

(ல) சீட்டிழுப்பு இலக்கம் 132 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக் கட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் .

7. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (உ) விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **NLB ஹந்தஹன** தேசிய லொத்தரை (இதற்கு முன்னர் "சுப்பிரி வாசனா" என்ற பெயரின் கீழ் நடாத்தப்பட்ட) இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வாரத்தில் ஏழு நாட்களும் வாரத்திற்கு ஏழு சீட்டிழுப்புகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு லொத்தர் சீட்டும் நாற்பது ரூபாய் (ரூ.40/-)விற்கப்படுதல் வேண்டும்

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மாத்திரமே வெல்லக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு சீட்டிலும் பன்னிரண்டு இராசிச் சின்னங்களிலிருந்து (12) ஒரு இராசிச் சின்னமும், ஒன்று தொடக்கம் அறுபத்திரண்டு (1-62) வரையிலான இலக்க எல்லைக்குள் நான்கு இலக்கங்களும் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு லொத்தர் சீட்டுகளிலும் மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறி முறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டுவடிவம் ஆகியவற்றில் தொடரிலக்க மொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வெற்றி பெறும் லொத்தர் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஒன்று தொடக்கம் அறுபத்திரண்டு (1-62)வரையிலான இலக்கங்களைக் கொண்ட பீப்பாய் ஒன்றிலிருந்து நான்கு இலக்கங்களும், பன்னிரண்டு இராசிச் சின்னங்கள் (12) அடங்கிய பீப்பாயிலிருந்து ஒரு இராசிச் சின்னமும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

(7) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நூற்றுக்கு ஐம்பத்தி மூன்று (53%) சதவீதம் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப்பணத்துக்கு (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

இ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்தின் ஊடக வேறு நிதியங்களுக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஈ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பதினேழு சதவீதம் (17%) தேசிய லொத்தர் சபையின் "சபை நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) சீட்டொன்றிலுள்ள இராசிச் சின்னமும், நான்கு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட இராசிச் சின்னத்துடனும், நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அந்தச் சீட்டுக்கு மூன்று மில்லியன் ரூபாவுக்கு (ரூ.3,000,000/-) குறையாத சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) சீட்டொன்றிலுள்ள நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அந்தச் சீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா (ரூ.1,000,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள இராசிச் சின்னமும், ஏதேனும் மூன்று இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட இராசிச் சின்னத்துடனும், மூன்று இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்தச் சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருபத்தையாயிரம் ரூபா (ரூ.25,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஏதேனும் மூன்று இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள இராசிச் சின்னமும், ஏதேனும் இரண்டு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட இராசிச் சின்னத்துடனும், இரண்டு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்தச் சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐநூறு ரூபா (ரூ.500/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஓ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டலொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள இராசிச் சின்னமும், ஏதேனும் ஒரு இலக்கமும், தெரிவு செய்யப்பட்ட இராசிச் சின்னத்துடனும் ஏதேனும் ஒரு இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூற்றியிருபது ரூபா (ரூ.120/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இலக்கம், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட லொத்தர் சீட்டில் அல்லது லொத்தர் சீட்டுக்களிலுள்ள இராசிச் சின்னம், தெரிவு செய்யப்பட்ட இராசிச சின்னத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ங) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| சுப்பர் பரிசு | இராசிச் சின்னமும், 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 3,000,000/- |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000/- வீதம் |
| 2 பரிசு | 3 இலக்கங்களும், இராசிச் சின்னமும் சரியாயின் | ரூ. 25,000/- வீதம் |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/- வீதம் |
| 4 பரிசு | 2 இலக்கங்களும், இராசிச் சின்னமும் சரியாயின் | ரூ. 500/- வீதம் |
| 5 பரிசு | 2இலக்கங்கள் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | 1 இலக்கமும், இராசிச் சின்னமும் சரியாயின் | ரூ. 120/- வீதம் |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 8 பரிசு | இராசிச் சின்னம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |

(ச) ஹந்தஹன லொத்தரின் சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.3,000,000/-) ஆரம்பமாகும்

(ஞ) தற்போதுள்ள சுப்பர் பரிசை வென்றால், NLB ஹந்தஹன பரிசு ஒதுக்கக்கணக்கைப் பயன்படுத்தி மூன்று மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.3,000,000/-) புதிய சுப்பர் பரிசு ஆரம்பமாகும்

(ட) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட சீட்டுக்கள் விற்பனையினால் கிடைத்த நூற்றுக்கு ஐம்பத்தி மூன்று (53%) சதவீதத்திலிருந்து ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும் பட்சத்தில், குறித்த அத்தொகையிலிருந்து (மிகை /மீதி) நூற்றுக்கு பத்து (10%) சதவீதம், முன் கொண்டு செல்லப்படும் சுப்பர் பரிசு பெறுமதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மிகுதியாகவுள்ள நூற்றுக்கு தொண்ணூறு (90%) சதவீதமானவை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, NLB ஹந்தஹன பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்

(ண) ஏதேனும் NLB ஹந்தஹன லொத்தர் சீட்டிழுப்பில் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து NLB ஹந்தஹன பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணம் அல்லது பிறவேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது செலுத்தப்படவேண்டிய நிலுவைப் பணத்தினைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(த) அவசியமாகக் கருதப்படுமிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகள் கொடுப்பனவுக்காக NLB ஹந்தஹன பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும்

(ந) சீட்டிழுப்பு இலக்கம் 535 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக் கட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் 3 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் .

8. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (ஊ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **தன நிதானய** தேசிய லொத்தரை இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்தில் ஏழு நாட்களும் வாரத்திற்கு ஏழு சீட்டிழுப்புகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு லொத்தர் சீட்டும் நாற்பது ரூபாய்க்கு (ரூ.40/-)என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மாத்திரமே வெல்லக்கூடியதாக இருத்தல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், ஏதேனும் வெற்றிபெற்ற லொத்தர் சீட்டிலுள்ள மேலதிக எழுத்து தெரிவு செய்யப்பட்ட எழுத்தொன்றுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய வெற்றிபெற்ற லொத்தர் சீட்டுக்கு மேலதிகமாக நாற்பது ரூபா(ரூ.40/-) வழங்கப்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு சீட்டிலும் ஒன்று தொடக்கம் எண்பத்திரண்டு (1-82) வரையிலான இலக்க எல்லைக்குள் நான்கு இலக்கங்களும், “ஏ” தொடக்கம் “இசெட் ” வரையிலான ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களில் ஒன்றும் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு லொத்தர் சீட்டும், மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறிமுறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டு வடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வெற்றி பெறும் லொத்தர் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஒன்று தொடக்கம் எண்பத்திரண்டு (1-82) வரையிலான இலக்கங்களைக் கொண்ட பீப்பாய் ஒன்றிலிருந்து நான்கு இலக்கங்களும், ஆங்கில அரிச்சுவடியிலுள்ள “ஏ” தொடக்கம் “இசெட் ” வரையிலான ஆங்கில எழுத்துக்கள் அடங்கிய பீப்பாய் ஒன்றிலிருந்து ஒரு ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் .

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து பெரும் பணத்தில் நூற்றுக்கு நாற்பத்தியொன்பது (49%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபதுசதவீதம் (20%) முகவர் தரகுப்பணத்துக்கு (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

இ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஈ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபத்தியொரு சதவீதம் (21%) தேசிய லொத்தர் சபையின் “சபை நிதியத்திற்கு” ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) சீட்டொன்றிலுள்ள ஆங்கில எழுத்தும், நான்கு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடனும், நான்கு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்த சீட்டுக்கு எண்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூ.80,000,000/-) குறையாத சுப்பர் பரிசு வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) சீட்டொன்றிலுள்ள நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அந்தச் சீட்டுக்கு இரண்டு மில்லியன் ரூபா (ரூ.2,000,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்தும், ஏதேனும் மூன்று இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடனும், ஏதேனும் மூன்று இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்த சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இலட்சம் ரூபா (ரூ.200,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் மூன்று இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஆறாயிரம் ரூபா (ரூ.6,000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள ஆங்கில எழுத்தும், ஏதேனும் இரண்டு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடனும், ஏதேனும் இரண்டு இலக்கங்களுடனும், ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2000/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டசீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபா (ரூ.200/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஓ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்தும், ஏதேனும் இலக்கமும், தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடனும், ஏதேனும் இலக்கத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து, அந்த சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூற்றியிருபது ரூபா (ரூ.120/-) வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இலக்கம், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-)வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து, தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-)வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ங) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள மேலதிக எழுத்து, தெரிவுசெய்யப்பட்ட எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நாற்பது ரூபா (ரூ.40/-)வீதம் வழங்கப்படுதல் வேண்டும்

(ச) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக் கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும், 4 இலக்கங்களும் சரியாயின் | ரூ.80,000,000/- |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.2,000,000/-வீதம் |
| 2 பரிசு | ஆங்கில எழுத்தும், 3 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 200,000/- வீதம் |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 6,000/- வீதம் |
| 4 பரிசு | ஆங்கில எழுத்தும், 2 இலக்கங்களும் சரியாயின் | ரூ. 2,000/- வீதம் |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 200/- வீதம் |
| 6 பரிசு | ஆங்கில எழுத்தும், 1 இலக்கமும் சரியாயின் | ரூ. 120/- வீதம் |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து சரியாயின் | ரூ. 40/- வீதம் |
| 9 பரிசு | மேலதிக எழுத்து | ரூ. 40/- வீதம் |

(ஞ) தன நிதானய லொத்தரின் சுப்பர் பரிசுத் தொகையின் பெறுமதி எண்பது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.80,000,000/-) ஆரம்பமாகும்

(ட ) தற்போதுள்ள சுப்பர் பரிசை வென்றால்,, தன நிதானய பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி எண்பது மில்லியன் ரூபாவினால் (ரூ.80,000,000/-) புதிய சுப்பர் பரிசு ஆரம்பமாகும்

(ண) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டு சீட்டுக்களின் விற்பனையினால் கிடைத்த நூற்றுக்கு நாற்பத்தியொன்பது (49%) சதவீதத்தில் ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும் பட்சத்தில், அதில் மீதியாகவுள்ள தொகையிலிருந்து (மிகை/மீதி) நூற்றுக்கு இருபது (20%) சதவீதம் முன் கொண்டு செல்லும் சுப்பர் பரிசு பெறுமதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மிகுதி நூற்றுக்கு எண்பது (80%) சதவீதமானவை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, தன நிதானய பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்

(த) ஏதேனும் தன நிதானய லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து, தன நிதானய பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள அல்லது பிற வேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது செலுத்தப்பட வேண்டிய நிலுவை பணத்தினைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(ந) தேசிய லொத்தர் சபை அவசியமெனக் கருதுகின்றவிடத்து , தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகளை வழங்குவதற்காக தன நிதானய பரிசு ஒதுக்கக கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும்அத்துடன்

(ப) சீட்டிழுப்பு இலக்கம் 1197 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக்கட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

9. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொலப்பட்ட 2 (எ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **NLB மெகா மில்லியன்ஸ்** தேசிய லொத்தரை இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஆண்டொன்றுக்கு இரண்டு சீட்டிழுப்புகள் நடத்தப்படுதல் வேண்டும்.
(2) ஒவ்வொரு சீட்டும் ஆயிரம் ரூபாவிற்கு (ரூ.1,000/-) விற்கப்படுதல் வேண்டும்.
(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசையோ அல்லது அதிக பரிசுகளையோ வெல்லகூடியதாக இருத்தல் வேண்டும்.
(4) மூன்று இலட்சம் சீட்டுக்கள் (300,000) விற்பனைக்காக சர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(5) ஒவ்வொரு சீட்டிலும் பின்வருமாறு ஐந்து தொகுதி இலங்கங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்பதுடன், அந்த தொகுதி ஐந்தும் பரிசுகளை வழங்குவதற்காக வெவ்வேறாக சீட்டிலுக்கப்படுதல் வேண்டும்

(அ) சுப்பர் பரிசு வெற்றி இலக்கம்
(ஆ) மில்லியனுக்கான வெற்றி இலக்கம்
(இ) இலட்ச ரூபாய்க்குரிய பரிசு வெற்றி இலக்கம்
(ஈ) ஆயிரத்துக்குரிய வெற்றி இலக்கம்
(உ) வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்துக்கான வெற்றி இலக்கம்

(i) சுப்பர் பரிசு வெற்றி இலக்க தொகுதி, ஆறு இலக்கங்களைக் கொண்டிருக்கின்றது. சுப்பர் பரிசு வெற்றி இலக்க தொகுதியின் முதல் இலக்கமானது பூச்சியத்திலிருந்து இலக்கம் இரண்டு (0-2) வரையான இலக்க எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும். ஏனைய ஐந்து இலக்கங்களில் ஒவ்வொரு இலக்கமும் பூச்சியத்திலிருந்து இலக்கம் ஒன்பது (0-9) வரையிலான எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறிமுறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டுவடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்)

(ii) மில்லியனுக்குரிய வெற்றி இலக்க தொகுதி நான்கு இலக்கங்களைக் கொண்டிருக்கின்றது. மில்லியனுக்குரிய வெற்றி இலக்க தொகுதியின் முதல் இலக்கமானது பூச்சியத்திலிருந்து இலக்கம் இரண்டு (0-2) என்ற எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஏனைய மூன்று இலக்கங்களில் ஒவ்வொரு இலக்கமும் பூச்சியத்திலிருந்து இலக்கம் ஒன்பது (0-9) வரையிலான எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒரு இலட்சத்துக்குரிய வெற்றி இலக்க தொகுதி நான்கு இலக்கங்களைக் கொண்டிருக்கும் . ஒரு இலட்சத்துக்குரிய வெற்றி இலக்கம் தொகுதியின் முதல் இலக்கமானது பூச்சியத்திலிருந்து இலக்கம் இரண்டு (0-2) வரையான எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஏனைய மூன்று இலக்கங்களில் ஒவ்வொரு இலக்கமும் பூச்சியத்திலிருந்து இலக்கம் ஒன்பது (0-9) வரையிலான எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) ஆயிரத்துக்குரிய வெற்றி இலக்க தொகுதி இரண்டு இலக்கங்களைக் கொண்டிருக்கும். ஆயிரத்துக்குரிய வெற்றி இலக்க தொகுதியின் முதல் இலக்கமானது பூச்சியத்திலிருந்து இரண்டு (0-2) என்ற எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஏனைய இலக்கம் பூச்சியத்திலிருந்து ஒன்பது (0-9) வரையிலான எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்துக்குரிய வெற்றி இலக்க தொகுதி ஐந்து இலக்கங்களைக் கொண்டிருக்கும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணத்துக்குரிய வெற்றி இலக்க தொகுதியின் முதல் இலக்கமானது பூச்சியத்திலிருந்து இரண்டு (0-2) என்ற எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும். ஏனைய மூன்று இலக்கங்களும் பூச்சியத்திலிருந்து ஒன்பது (0-9) வரையிலான இலக்க எல்லைக்குள் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நூற்றுக்கு ஐம்பத்தியெட்டு (58%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்

(ஆ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவரின் தரகுப்பணத்துக்கு (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

இ) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

ஈ) லொத்தர் சீட்டுக்களின விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பன்னிரண்டு சதவீதம் (12%) தேசிய லொத்தர் சபையின சபை நிதியத்திற்கு" ஒதுக்கப்படுதல் வேண்டும்

(உ) ஒரு லொத்தர் சீட்டில் சுப்பர் பரிசு இலக்கத்திலுள்ள ஆறு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட சுப்பர் பரிசுக்குரிய ஆறு இலக்கங்களுடனும் ஒழுங்குமுறையில் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு ஐம்பது மில்லியன் ரூபா (ரூ.50,000,000/-) சுப்பர் பரிசாக வழங்கப்படுதல் வேண்டும்

(ஊ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள மில்லியனுக்குரிய வெற்றி இலக்கத்திலுள்ள நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட மில்லியனுக்குரிய ஒழுங்குமுறையில் அமைந்த நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா (ரூ.1,000,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஒரு இலட்சத்துக்குரிய வெற்றி இலக்கத்திலுள்ள ஏதேனும் நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபா (ரூ.100,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஆயிரத்துக்குரிய வெற்றி இலக்கத்திலுள்ள ஏதேனும் இரண்டு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட தொடர்ச்சியாக வருகின்ற ஆயிரத்துக்குரிய ஏதேனும் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா (ரூ.1,000/-) வழங்கப்படுதல் வேண்டும்

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள வெளிநாட்டு சுற்றுப்பயணத்திற்கான வெற்றி எண்ணிலுள்ள ஐந்து இலக்கங்கள், வெளிநாட்டு சுற்றுப்பயணத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட தொடர்ச்சியாக வருகின்ற ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் வெளிநாட்டு சுற்றுப்பயணம் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்

(ஒ) அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் மூன்று வடிவங்களில், அதாவது நியம இலக்க வடிவம், பட்டைக்குறிமுறை இலக்க வடிவம் மற்றும் துரித பதிற்செயற்பாட்டு குறியீட்டுவடிவம் ஆகியவற்றில் தொடரிலக்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்

(ஓ) இதன்படி, சீட்டின் பின்பக்கத்தில் காணப்படுகின்ற பரிசுக்கட்டமைப்பு பின்வருமாறு:

| பரிசுக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் பரிசுக்குரிய இலக்கங்களில் 6 இலக்கத்துக்குரிய தொகுதி இலக்கம் சரியாயின் | ரூ.50,000,000/- |
| மில்லியனுக்குரிய பரிசு | மில்லியனுக்குரிய பரிசு இலக்கத்தில் 4 இலக்கத்துக்குரிய தொகுதி இலக்கம் சரியாயின் | ரூ.1,000,000/-வீதம் |
| ஒரு இலட்சத்துக்குரிய பரிசு | ஒரு இலட்சத்துக்குரிய பரிசு இலக்கத்தில் 4 இலக்கத்துக்குரிய தொகுதி இலக்கம் சரியாயின் | ரூ.100,000/- வீதம் |
| ஆயிரத்துக்குரிய பரிசு | ஆயிரத்துக்குரிய பரிசு இலக்கத்தில் 4 இலக்கத்துக்குரிய தொகுதி இலக்கம் சரியாயின் | ரூ.1,000/- வீதம் |
| வெளிநாட்டு சுற்றுலாப் பரிசு | வெளிநாட்டு சுற்றுலாப்பயணத்திற்கான 5 இலக்கத்துக்குரிய தொகுதி இலக்கம் சரியாயின் | வெளிநாட்டு சுற்றுலாப்பயணம் (உயர்ந்த பட்சமாக ரூ. 400,000/- எல்லைக்குள் தேசிய லொத்தர் சபையின் தீர்மானத்தின்படி |

(ஔ) தற்போதுள்ள சுப்பர் பரிசு வெல்லப்பட்டால், பரிசு ஒதுக்கக் கணக்கை அல்லது வேறு ஏதேனும் பரிசு ஒதுக்கக் கணக்கை பயன்படுத்தி ஐம்பது மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ.50,000,000/-) புதிய சுப்பர் பரிசு வழங்கப்படும்

(க) பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த வருமானத்தில் நூற்றுக்கு ஐம்பத்தெட்டு சதவீதத்தில் (58%) ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருக்கின்றவிடத்து, அவ்வாறு மீதியாகவுள்ள மிகை /மீதி பணத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம்(100%) நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, NLB மெகா மில்லியன்ஸ் பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்

(ங) தேசிய லொத்தர் சபை NLB மெகா மில்லியன்ஸ் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து, “NLB மெகா மில்லியன்ஸ்” பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள அல்லது பிறவேறு பரிசு ஒதுக்கக் கணக்கிலுள்ள பணமானது செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணத்தினைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(ச) தேசிய லொத்தர் சபை அவசியமெனக் கருதுகின்றவிடத்து, தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்பட்ட வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகள் கொடுப்பனவுக்காக NLB மெகா மில்லியன்ஸ் பரிசு ஒதுக்கக்கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு தேசிய லொத்தர் சபை உரித்துடையதாதல் வேண்டும் அத்துடன்

(ஞ) சீட்டிழுப்பு இலக்கம் 01 தொடக்கம் மேற்சொல்லப்பட்ட பரிசுக் கட்டமைப்பு 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம 30 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

10. தேசிய லொத்தர் சபையினால், மேற்சொல்லப்பட்ட 2 (ஏ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **செவன சுரண்டல்** தேசிய லொத்தரை இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வெல்லப்பட்ட பரிசுகளை அடையாளம் காண்பதற்காக சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற சுரண்டுவதற்கும் ஒத்திசைவுறுவதைப் பார்ப்பதற்குமான தொழில்நுட்பத்தினைப் பின்பற்றி குறித்த லொத்தருக்குரிய பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற மேம்படுத்தப்பட்ட பரிசு, அதற்காக நடாத்தப்படுகின்ற விசேட சீட்டிழுப்பு ஊடாக வழங்கப்பட முடியும்.

(3) சீட்டுக்களின் விலைகள் இரண்டு தொகுதிகளின் கீழ் விற்பனை செய்யப்படும் என்பதுடன், அந்த சீட்டுகள் நாற்பது ரூபா (ரூ.40/-) மற்றும் ஐம்பது ரூபா(ரூ.50/-) ஆகிய விலை தொகுதியின் கீழ் விற்கப்படுதல் வேண்டும் . ஒவ்வொரு சீட்டுத் தொகுதிக்காக தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் சீட்டுக்களின் எண்ணிக்கை தேசிய லொத்தர் சபையினால் விற்பனைக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) அச்சிடப்படும் சீட்டுத் தொகுதியில் அடங்கவேண்டிய சீட்டுகளின் எண்ணிக்கை தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

(5) சீட்டுக்கள் விற்பனை மூலமான வரும்படியிலிருந்து நூற்றுக்கு நாற்பத்தொன்பது (49%) சதவீதத்திலிருந்து நூற்றுக்கு ஐம்பத்தி மூன்று (53%) வரை பரிசுத் தொகையினை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும். தேசிய லொத்தர் சபையினால் ஒவ்வொரு லொத்தரிலும் கிடைக்கின்ற வரும்படியிலிருந்து நூற்றுக்கு நாற்பத்தொன்பது (49%) சதவீதத்திலிருந்து நூற்றுக்கு ஐம்பத்திமூன்று (53%) சதவீத எல்லைக்குள் பரிசுத்தொகை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(6) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப் பணத்திற்காக (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

(7) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்தின் ஊடாக உரிய நிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

(8) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பதினேழு (17%) சதவீததிலிருந்து நூற்றுக்கு இருபத்தொறு (21%) சதவீத எல்லைக்குள் தேசிய லொத்தர் சபையின் “சபை நிதியத்திற்கு” ஒதுக்கப்படுதல் வேண்டும்

(9) சீட்டுக்களை வைத்திருப்பவரால் சீட்டிலுள்ள சுரண்டும் கட்டத்தினுள் மூடியிருக்கும் பதார்த்தம் அகற்றப்படும் வரை உடனடிப் பரிசுகளைப் கண்டுபிடிக்க முடியாதவாறு சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(10) ஒரு சீட்டை வைத்திருப்பவர் பரிசை வென்றுள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவது எந்த முறையில் என்பதனையும் மற்றும் அத்தகைய பரிசுக்கு எவ்வாறு உரிமை கோரவேண்டுமென்பது பற்றியும் ஒவ்வொரு சீட்டிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

11. தேசிய லொத்தர் சபையினால் , மேற்சொல்லப்பட்ட 2(ஐ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட **சமூர்த்தி சுரண்டல்** தேசிய லொத்தரை இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடத்துதல் வேண்டும்: :-

(1) வெல்லப்பட்ட பரிசுகளை அடையாளம் காண்பதற்காக சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற சுரண்டுவதற்கும் ஒத்திசைவுறுவதைப் பார்ப்பதற்குமான தொழில்நுட்பத்தினைப் பின்பற்றி உரிய லொத்தரின் பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற மேம்படுத்தப்பட்ட பரிசுகள் , அது சார்பாக நடாத்தப்பட்ட விசேட சீட்டிழுப்பின் ஊடாக வழங்கப்படலாம்.

(3) சீட்டுக்களின் விலைகள் இரண்டு தொகுதிகளின் கீழ் விற்பனை செய்யப்படும் என்பதுடன், அந்த சீட்டுகள் நாற்பது ரூபா (ரூ.40/-) மற்றும் ஐம்பது ரூபா(ரூ.50/-) ஆகிய ஒவ்வொரு விலை தொகுதியின் கீழ் விற்கப்படுதல் வேண்டும் . ஒவ்வொரு சீட்டுத் தொகுதிக்காக தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் சீட்டுக்களின் எண்ணிக்கை தேசிய லொத்தர் சபையினால் விற்பனைக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) அச்சிடப்படும் சீட்டுத் தொகுதியில் அடங்கவேண்டிய சீட்டுகளின் எண்ணிக்கை தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

(5) சீட்டுக்கள் விற்பனை மூலமான வரும்படியிலிருந்து நூற்றுக்கு நாற்பத்தொன்பது (49%) சதவீதத்திலிருந்து நூற்றுக்கு ஐம்பத்தி மூன்று (53%) வரை பரிசுத் தொகையினை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும். தேசிய லொத்தர் சபையினால் ஒவ்வொரு லொத்தரிலும் கிடைக்கின்ற வரும்படியிலிருந்து நூற்றுக்கு நாற்பத்தொன்பது (49%) சதவீதத்திலிருந்து நூற்றுக்கு ஐம்பத்திமூன்று (53%) சதவீத எல்லைக்குள் பரிசுத்தொகை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(6) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு இருபது சதவீதம் (20%) முகவர் தரகுப் பணத்திற்காக (சீட்டுக்களை விநியோகிக்கும் முகவருக்கு 1.25% தரகுப் பணமும் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் முகவருக்கு 18.75% தரகுப் பணமும்) ஒதுக்கப்படுதல் வேண்டும்

(7) சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பத்து சதவீதம் (10%) திரட்டுநிதியத்திற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்

(8) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரும்படியிலிருந்து நூற்றுக்கு பதினேழு (17%) சதவீதிலிருந்து நூற்றுக்கு இருபத்தொறு (21%) சதவீத எல்லைக்குள் தேசிய லொத்தர் சபையின் “சபை நிதியத்திற்கு” ஒதுக்கப்படுதல் வேண்டும்

(9) சீட்டுக்களை வைத்திருப்பவரால் சீட்டிலுள்ள சுரண்டும் கட்டத்தினுள் மூடியிருக்கும் பதார்த்தம் அகற்றப்படும் வரை உடனடிப் பரிசுகளைப் கண்டுபிடிக்க முடியாதவாறு சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(10) ஒரு சீட்டை வைத்திருப்பவர் பரிசை வென்றுள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவது எந்த முறையில் என்பதனையும் மற்றும் அத்தகைய பரிசுக்கு எவ்வாறு உரிமை கோரவேண்டுமென்பது பற்றியும் ஒவ்வொரு சீட்டிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

12. இவ்விதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருந்த போதிலும், பின்வரும் ஏற்பாடுகள் பொதுவாக ஏதேனும் தேசிய லொத்தர் சீட்டிழுப்பிற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்:-

(1) இவ்விதிகளினால் வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிப்பதற்கான குறித்த ஒரு முறை அறிமுகப்படுத்தப்படாதவிடத்து, ஏதேனும் தேசிய லொத்தரின் சீட்டிழுப்பு, அடையாளமிடப்பட்ட பந்துகள் அல்லது உருப்படிகளுடன் ஒரு பீப்பாய் அல்லது பல பீப்பாய்கள் அல்லது ஒரு சீட்டிழுப்பு இயந்திரம், இல்லாவிடின் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்படுதல் வேண்டும்.

(2) சுரண்டும் லொத்தர் சீட்டுகள் அல்லாத அதேபோல் உடனடி பரிசுகள் வழங்குதலை தன்னகத்தே கொண்டிராத, ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டின் மீதும் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

i) லொத்தரின் பெயர்
ii) ஒவ்வொரு சீட்டினதும் விலை
iii) எத்தனையாவது சீட்டிழுப்பு என்பது பற்றி
iv) சீட்டிழுப்பு நடைபெறும் திகதி
v) வெற்றி பெற்ற பரிசுகளை அடையாளம் காணக்கூடிய முறைகள் மற்றும் பரிசின் பெறுமதி
vi) "கிவ்ஆர்" நியம இலக்க வடிவம் அத்துடன்
vii) 1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் (திருத்தப்பட்ட) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய லொத்தர் சபையினால் லொத்தர்கள் நடாத்தப்படுகின்றன என்பது.

(ஆ) லொத்தர் சீட்டிழுப்பானது, தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு கலையகத்திலோ அல்லது நிகழ்விடத்திலோ நடத்தப்படுதல் வேண்டும்.

(இ) விதிவிலக்கான அல்லது தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாக லொத்தர் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் குறித்த லொத்தர் சீட்டிழுப்பை தேசிய லொத்தர் சபையினால் நடத்தமுடியாவிடின், தேசிய லொத்தர் சபை குறித்த லொத்தர் சீட்டிழுப்பின் புதிய திகதியை பொதுமக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) சுரண்டும் லொத்தர்களைப் போலவே உடனடி பரிசுகளை வழங்குகின்ற ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டிலும் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

i) லொத்தரின் பெயர்
ii) ஒவ்வொரு சீட்டினதும் விலை
iii) சீட்டானது ஒரு பரிசை வென்றுள்ளதா எனத் தீர்மானிக்கும் முறையும் பரிசின் பெறுமதி அல்லது பொருட் பரிசு மற்றும் அப்பரிசுக்காக விண்ணப்பிக்கும் முறையும்
iv) "கிவ்ஆர்" நியமஇலக்க வடிவம் அத்துடன்
v) 1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் (திருத்தப்பட்ட) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய லொத்தர் சபையினால் லொத்தர்கள் நடாத்தப்படுகின்றன என்பது.

(4) தேசிய லொத்தர் சபையினால் தெரிவு செய்யப்பட்ட தேசிய லொத்தர்களின் வெற்றி இலக்கம் அல்லது இலக்கங்கள், எழுத்து அல்லது எழுத்துக்கள், சின்னம் அல்லது சின்னங்கள் அவற்றின் பரிசுகளின் பெறுமதி அல்லது பொருட்களின் பெறுமதி மற்றும் தேசிய லொத்தர் சபை, அவசியமானதெனக் கருதுகின்ற ஏனைய தகவல்களைக் கொண்டிருக்கின்ற லொத்தரின் முடிவுகளை, தேசிய லொத்தர் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மற்றும் ஏனைய ஊடகத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளில் வெளியிடும். வெற்றியாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளை வெளியிடும் உரிமையை தேசிய லொத்தர் சபை கொண்டுள்ளது.

(5) கிழிந்த அல்லது உருக்குலைந்த சீட்டுக்கள் ஒரு லொத்தரின் ஒரு பரிசை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படுவதற்காக தகுதியற்றதாய் இருத்தல் வேண்டும். ஆயினும், கேள்விக்குட்பட்டுள்ள அத்தகைய சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் ஆவணங்களின் பரிசோதகர் அல்லது வேறொரு ஆளினால் இத்தகைய சீட்டுக்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதற்காக தேசிய லொத்தர் சபைக்கு ஏற்படுகின்ற செலவினங்களை செலுத்துதல் மூலம் பரிசுகள் வழங்கப்படுவதற்காக இவற்றையே சமர்ப்பிக்க முடியும்.

(6) ஒவ்வொரு லொத்தர் தொடர்பாகவும் அச்சிடப்பட்ட எல்லா சீட்டுக்களும் டிஜிட்டல் விற்பனைக்காக வைக்கப்படுதல் வேண்டும். சீட்டில் குறிப்பிடப்பட்ட விலையிலேயே சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சீட்டிழுப்புக்கும் முன்னர் அக்குறித்த சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்ட, டிஜிட்டல் விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட எல்லாச் சீட்டுகளிலிருந்து, குறித்த சீட்டிழுப்பில் விற்பனை செய்யப்படாத எல்லா சீட்டுக்களும் ஆவணப்படுத்தப்பட்டு இரத்துச் செய்வதற்காக கணக்காய்வாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) லொத்தர் சீட்டில் அச்சிடல் பிழையொன்று இருந்தால், அந்த சீட்டை கொள்வனவு செய்த வாடிக்கையாளர் அந்த சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புக்கு புதிய சீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவர் ஆவார்.

(8) தேசிய லொத்தர் சபையானது ஒரு சாதாரணமான அல்லது விசேட சீட்டிழுப்பின் மூலம் ஏதேனுமொரு, தேசிய லொத்தரின் சீட்டுக்களின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன், அத்தேசிய லொத்தர் சீட்டுக்களின் தொடர் இலக்கத்திற்கு அல்லது வேறு

ஏதேனுமொரு இலக்கத்திற்கு அல்லது ஆங்கில எழுத்துக்கு அல்லது சின்னத்துக்கு மேலதிக பரிசுகளை வாடிக்கையாளர் ஊக்குவிப்புப் பரிசில்களாக காலத்துக்குக் காலம் வழங்கலாம்.

(9) சீட்டிழுப்பு, தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்து ஒரு பிரதிநிதியையும் ,தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினரையும் அல்லது தேசிய லொத்தர் சபையின் மத்திய முகாமைத்துவ வகுதியில் அல்லது உயர் முகாமைத்துவ வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் சிரேஷ்ட உதவி பொலிஸ் உத்தியோகத்தர் தரவரிசைக்குக் குறையாத பதவி வகிக்கும் பொலிஸ் உத்தியோகத்தரைக் கொண்டமைந்திருக்கின்ற (இது, இதனகத்துப் பின்னர் ''மேற்பார்வை சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்பார்வை சபையின் முன்னிலையில் சீட்டிழுப்புகள் நடத்தப்படுதல் வேண்டும். தேசிய லொத்தர் சபையின் தீர்மானத்தின்படி அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஒன்றிலிருந்து சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் ஒருவர் பங்குபற்றுவார்.

(10) தேசிய லொத்தர் சபையின் தவிசாளர் சீட்டிழுப்பில் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் செயல்முறைக்கு இணங்க வெற்றிபெறும் இலக்கத்தை அல்லது எழுத்தைத் தெரிவு செய்யும் அந்த நேரத்தை தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதும், தெரிவு செய்யப்படும் வெற்றி இலக்கம், அல்லது எழுத்து அல்லது சின்னம் சட்டப்படி தெரிவு செய்யப்பட்ட இலக்கமாக அல்லது எழுத்தாக அல்லது சின்னமாக கருதப்படுதல் வேண்டும்.

(11) டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி லொத்தர் சீட்டிழுப்பு நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கணினி முறைமை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரால் பரிசோதிக்கப்படும்.

(12) சீட்டிழுப்பின் நோக்கத்திற்காக, அடையாளமிடப்பட்ட இலக்கங்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது சின்னம் உள்ள பொருட்கள் சீட்டிழுப்பின் பின்னர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மேற்பார்வைச் சபையின் உறுப்பினர் மற்றும் தேசிய லொத்தர் சபையின் பதவி நிலை உத்தியோகத்தர் முன்னிலையில் பாதுகாப்புப் பெட்டியினுள் இடப்பட்டு பூட்டு இடப்பட்டு, பாதுகாப்பு ஸ்ரிக்கரினால் பொறியிடப் படுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய குறித்த பெட்டியானது, தேசிய கணக்காய்வு அலுவலகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மேற்பார்வைச் சபையின் உறுப்பினர் முன்னிலையில் திறக்கப்படுதல் வேண்டும். மேற்சொல்லப்பட்ட பெட்டியின் திறப்புக்கள் சபையின் தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சபையின் நிறைவேற்று அலுவலரின் கட்டுக்காப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

(13) தொலைக்காட்சியில் அல்லது பிற வேறு டிஜிட்டல் ஊடகத்தில் ஒளிபரப்புச் செய்யப்படும் வரை சீட்டிழுப்பின் பதிவுகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஒரு ஒழுங்கு முறையானது செய்யப்பட்டிருத்தல் வேண்டும். லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைசார்ந்த ஒழுங்குமுறைகளை தேசிய லொத்தர் சபையின் தவிசாளர் முடிவெடுத்தல் வேண்டும். லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளில் கடமை ஆற்றுகின்ற உரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகள் தேசிய லொத்தர் சபையின் நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(14) தேசிய லொத்தரின் சீட்டிழுப்பு தொடர்பில் பயன்படுத்தப்பட்ட எல்லா இலக்கங்கள், எழுத்துக்கள் மற்றும் சின்னங்களைக் கொண்ட அனைத்து சீட்டிழுப்புப் உருப்படிகளும் கொண்டிருக்கின்ற , அத்தகையபொருட்கள் அனைத்தும் ஒரே சீராக அவற்றின் உறுதிப்பாட்டிற்கு நியாயமாக அவசியமானவை என்பதாகப் பயனுறும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட தரங்கள் தர நிர்ணய நிறுவகத்தினால் உரிய முறையில் பரிசோதனையிடப்படுதல் வேண்டும்.

(15) பதினெட்டு வயதுக்கு (18) கீழ்ப்பட்ட எவரேனும் ஆள் தேசிய லொத்தர்களை கொள்வனவு செய்யத் தகவுடையவர்களல்ல என்பதுடன் அத்தகையவர்களினால் ஏதேனும் அத்தகைய உரிமைக் கோரிக்கை பெறப்பட்டிருப்பின் தேசிய லொத்தர் சபை எவ்வித கொடுப்பனவையும் செய்தலாகாது அல்லது பரிசில்களை வழங்குதலாகாது.

(16) சீட்டின் பின்பக்கத்தில் தேசிய லொத்தர் சபையினால் கோரப்பட்ட விபரங்களை முறையாக நிரப்பி வெற்றிபெறும் சீட்டை வைத்திருக்கும் எவரேனும் ஆள், உரிய பரிசுக் கட்டமைப்பின்படி அதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். சீட்டிழுப்பு தினத்திலிருந்து ஆறு மாதங்களைக் (06) கொண்ட காலப்பகுதியொன்றுக்கு பரிசுகள் செல்லுபடியானவையாதல் வேண்டும்.இக்காலப்பகுதிக்குப் பின்னர் உரிமைகோரப்படாத பரிசுகள் அரசுடமையாக்கப்படுதல் வேண்டும்.

(i) விதித்துரைக்கப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு முடிவடைந்த நாளிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறுமாத (06) காலப்பகுதியொன்று காலாவதியான பின்னர், அதற்கு உரித்துடைய ஆளுக்கு வழங்கப்பட்டிருக்காத தேசிய லொத்தர் ஒன்றின் ஏதேனும் வெல்லப்பட்ட பணப் பரிசில், அத்தகைய ஆள் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் அரசுடமையாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், திரட்டியநிதியத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) விதித்துரைக்கப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு முடிவடைந்த நாளிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறுமாத காலப்பகுதியொன்று காலாவதியான பின்னர், அதற்கு உரித்துடைய ஆளுக்கு வழங்கப்பட்டிருக்காத தேசிய லொத்தர் ஒன்றின் ஏதேனும் வெல்லப்பட்ட வாடிக்கையாளர் பணம்/பணம் அல்லாத பரிசில்களை உரிமையுடைய நபர் முன்வராத காரணத்தால் அத்தகைய ஆளோருவருக்கு பரிசுகளை வழங்காதிருந்தால், அந்த பரிசு உரிமை கோரப்படாத பரிசாக கருதி, தேசிய லொத்தர் சபையின் பணம் அல்லாத பரிசில்களின் கையிருப்புடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(iii) விதித்துரைக்கப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு முடிவடைந்த நாளிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறுமாதகாலப் பகுதியொன்று காலாவதியான பின்னர், அதற்கு உரித்துடைய ஆளுக்கு வழங்கப்பட்டிருக்காத தேசிய லொத்தர் ஒன்றின் ஏதேனும் வெல்லப்பட்ட வாடிக்கையாளர் ஊக்குவிப்பு பணப் பரிசில்/பணமல்லாத பரிசு உரித்துடைய நபர் முன்வராத காரணத்தால் அந்த நபருக்கு பரிசுகள் வழங்கப்படாதிருந்தால், அந்தப் பரிசு உரிமை கோரப்படாத பரிசாக கருதி, அதனை சபையின் ஒதுக்க கணக்கிற்கு/பரிசுக் குவியலில் மீண்டும் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(17)

(i) நடைமுறையிலிருக்கின்ற லொத்தர் ஒன்றினை நிறுத்துவதற்கான முழு உரிமையையும் தேசிய லொத்தர் சபை கொண்டிருக்கும். நடைமுறையிலிருக்கின்ற லொத்தரின் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லையாயின், அது மீண்டும் சபையின் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) நடைமுறையிலிருக்கின்ற லொத்தர் ஒன்றினை புதிய கட்டமைப்புடன் சமர்ப்பிப்பதற்கான முழு உரிமையையும் தேசிய லொத்தர் சபை கொண்டிருக்கும். நடைமுறையிலிருக்கின்ற லொத்தரின் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லையாயின், மீள முன்வைக்கப்பட்ட லொத்தரின் புதிய சுப்பர் பரிசினை அதே சுப்பர் பரிசுடன் ஆரம்பிக்கலாம் அல்லது அந்த பரிசு தொகையினை பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி உயர்வடையச் செய்தல் அல்லது நடைமுறையிலுருக்கின்ற சுப்பர் பரிசை மீண்டும் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றி பரிசு ஒதுக்கக் கணக்கைப் பயன்படுத்தி புதிய சுப்பர் பரிசாக வழங்கவும் முடியும்.

13. தேசிய லொத்தர் சீட்டுக்களின் விற்பனைக்கு பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்:-

(1) தேசிய லொத்தர் சபையினால் அச்சடிக்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட விற்பனைகளுக்கு மேலதிகமாக, தேசிய லொத்தர் சீட்டுக்களை விற்கின்ற நோக்கத்திற்காக குறுகிய செய்தி சேவை (SMS) மற்றும் ஊடாட்ட குரல் துலங்கல் (IVR), கையடக்கத் தொலைபேசி பிரயோகங்கள், இணையம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் (இதனகத்துப் பின்னர் "டிஜிட்டல் ஊடகங்கள்"" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) போன்றவற்றை பயன்படுத்தலாம்.

(2) தேசிய லொத்தர் சபை, லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு டிஜிட்டல் ஊடகங்களை வழங்குகின்ற டிஜிட்டல் வர்த்தகர்களை தெரிவுசெய்து கொள்ள முடியும் என்பதுடன், சொல்லப்பட்ட டிஜிட்டல் வர்த்தகர்களுடன் தேசிய லொத்தர் சபை ஓர் உடன்படிக்கையையும் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(3) தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறும்,13 (2) ஆம் விதியின் கீழ் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட எதேனும் தரகுப் பணம் தேசிய லொத்தர் சபையினால் அவ்வாறு பெறப்பட்ட சேவைக்களுக்காக, டிஜிட்டல் வர்த்தகர்களுக்கு செலுத்துதல் வேண்டும்.

(4) 13(2) ஆம் விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள டிஜிட்டல் வர்த்தகரினால் தேசிய லொத்தர் சபை, கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநர்கள், கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துநர்கள் மற்றும் டிஜிட்டல் சேவை வழங்குநர்களுடன் ஒருங்கிணைப்பை பேணிச்செல்லுதல் வேண்டும். டிஜிட்டல் வர்த்தகரினால் பிழையில்லாத செயல்பாடு இடம்பெறுவதை உறுதிசெய்வதுடன், செயற்பாடுகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஏதேனும் பிழைகள் மற்றும் தவிர்ப்புகள் இடம்பெற்றால் அதற்கு பொறுப்பாதலும் வேண்டும்.

(5) தேசிய லொத்தர்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள பரிசுக் கட்டமைப்புகளுக்கிணங்க வெற்றியாளர்களுக்கான பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(6) டிஜிட்டல் ஊடகம் மூலம் கணினி மயமாக்கப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு விற்பனையின் நோக்கத்திற்காக, அத்தகைய ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் பிரதான தரவு மையத்திலிருந்து தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான தரவுத் தளம்/இடைவெளி ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டெழுப்பிலிருந்தும் டிஜிட்டல் வர்த்தகருக்கு குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(7) டிஜிட்டல் விற்பனை முகவரினால் உடன்படிக்கைகளுக்கிணங்க, அத்தகைய டிஜிட்டல் விற்பனை முகவருக்கு உரித்தாக்கப்படற்பாலதான தரகுகளைக் கழித்த பின்னர் மற்றும் அத்தகைய டிஜிட்டல் விற்பனை முகவருக்கு குறித்தொதுக்கப்பட்ட இலக்கத்தின் வீச்சிற்குள் விற்கப்பட்ட சீட்டுக்களின் வரும்படியை தேசிய லொத்தர் சபைக்குக் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும் டிஜிட்டல் விற்பனை முகவரினால் விற்பனை மற்றும் விற்பனை ஊக்குவிப்பு உபாயமொன்றாக தேசிய லொத்தர் சபையின் அனுமதியுடன் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆறுதல் பரிசுகள் வழங்கப்படலாம்.

(8) டிஜிட்டல் ஊடகம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தேசிய லொத்தருக்கு பரிசு ஒன்று கிடைக்கின்றவிடத்து அதன் உண்மையான உரிமையாளரும் இறுதிப் பயன்படுத்துநரும் இரு வேறு ஆட்களாக இருந்தால் கையடக்கத் தொலைபேசி ஒன்றின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தேசிய லொத்தருக்கு பரிசு ஒன்று கிடைக்கின்றவிடத்து, அந்த பரிசில்கள், டிஜிட்டல் வர்த்தகருடன் பதிவு செய்யப்பட்ட பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட ஆளுக்கே செலுத்தப்படுதல் வேண்டும்.

(9) டிஜிட்டல் ஊடகம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட லொத்தர் ஒன்றுக்கு பரிசு கிடைக்கின்றவிடத்து, டிஜிட்டல் விற்பனை முகவரினால் அந்த பரிசு பணத்தினை பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளரின் இலத்திரனியல் பணப்பைக்கு அல்லது வேறு டிஜிட்டல் ஊடகத்துக்கோ மாற்றுகின்றார். பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளரின் இலத்திரனியல் பணப்பைக்கு அல்லது வேறு எந்தவொரு டிஜிட்டல் ஊடகத்துக்கோ மாற்றப்படுகின்ற பரிசுகளின் குறைந்தபட்ச தொகை தேசிய லொத்தர் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். தேசிய லொத்தர் சபையால் டிஜிட்டல் விற்பனை முகவருக்கு அனுப்பப்படுகின்ற வெற்றி பரிசுகளின் திகதிகளின் அடிப்படையில் அமைந்த பரிசு பட்டியலின் மற்றும் தொடரிலக்கம் அடிப்படையில் டிஜிட்டல் விற்பனை முகவரினால் வெற்றி சீட்டுக்களின் பரிசு தொகை பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளரின் இலத்திரனியல் பணப்பைக்கு மாற்றுதல் வேண்டும்.

(10) டிஜிட்டல் ஊடகத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட லொத்தர் சீட்டுகளில் வெற்றியினைப் பெற்றுக்கொண்ட பரிசுபெறுநர்களுக்கு பணத்தைச் செலுத்துதல் தொடர்பாக டிஜிட்டல் தளத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் இந்த தொழிற்பாட்டை செயற்படுத்துதல் தேசிய லொத்தர் சபையுடன் இணங்கியுள்ள டிஜிட்டல் விற்பனை முகவரின் பொறுப்பாகும்.

(11) வெற்றியாளர்கள், காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் ஏதேனும் அரசாங்க வரிகளுக்கு உட்பட்டவர்களாதல் வேண்டும்.

(12) டிஜிட்டல் ஊடகத்தின் மூலம் லொத்தர் விற்பனைக்காக குறித்தொதுக்கப்பட்ட இலக்க வீச்சு தொடர்பாக தரவுகளைப் பதிவிறக்க முடியாமை, எதிர்பாராத மின்சார செயலிழப்பு அல்லது அத்தகைய தன்மையிலான வேறு ஏதேனும் எதிர்பாராத தொழிற்பாட்டு பிரச்சினை ஏற்படுமிடத்து, தேசிய லொத்தர் சபைக்கு அந்த நாளுக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களை நடத்தப்படக்கூடிய வகையில் டிஜிட்டல் ஊடகத்தின் மூலம் லொத்தர் விற்பனை செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அந்த இலக்க எல்லையை இரத்துச்செய்வதற்கான உரிமையை தேசிய லொத்தர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், அந்த இரத்துச் செய்தலின் மூலமாக பதிப்புக்குள்ளாகிய கொள்வனவளர்களுக்கு இரத்துச் செய்யப்பட்ட சீட்டுகளின் விற்பனைப் பெறுமதிக்கு சமனான புதிய சீட்டுகளை பணம் செலுத்தாது பெற்றுக்கொள்ளவதற்கு அனுமதியளிகப்படுதல் வேண்டும்.

(13) தேசிய லொத்தர்களின் கொள்வனவுதாரர்கள், தேசிய லொத்தர் சபை மற்றும் டிஜிட்டல் விற்பனை முகவர் மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனர் ஆகியோரின் எல்லா விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

14. 2013 ஆண்டு சனவரி மாதம் 31ஆம் திகதிய , 1795/37 ஆம் இலக்கமிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் (01ஆம் இலக்க) உடைய தேசிய லொத்தர் சபையின் விதிகள், அதன் கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

15. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய -

"நிதிச் சட்டம்" என்பது 1963 ஆம் ஆண்டின்11 ஆம் இலக்க நிதிச் (திருத்தப்பட்ட) சட்டம் எனப் பொருள்படும்

"தேசிய லொத்தர் சபை" என்பது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை எனப் பொருள்படும்

"தேசிய லொத்தர்" என்பது நிதிச் சட்டத்தின் பிரிவு 14(1)இன் கீழ் தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்படும் ஒரு லொத்தர் எனப் பொருள்படும்.

EOG 06-0044

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.